# மின் நுகர்வோர் உரிமைகள்

1. **மின் நுகர்வோரின் விண்ணப்பம் / மனுவின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மின்பகிர்மான உரிமம்தாரரால் (தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள்** : –

(அ) ஒழுங்குமுறை விதிகளின் விதித்தொகுப்புகளில் வகுத்துரைக்கப்பட்டடுள்ள படிவங்கள் / விண்ணப்பங்கள் அனைத்தும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பிரிவு அலுவலகங்களிலும் மேற்சொன்ன கழகத்தின் இணையதளத்திலும் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

(ஆ) விதித்தொகுப்பின் / ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளின்படி பூர்த்தி செய்யப்பட்ட முழு வடிவிலான விண்ணப்பம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அந்தப்பகுதி பிரிவு அலுவலரிடம் (அல்லது பிரிவு அலுவலர் இல்லாதிருப்பாரானால் அதிகாரமளிக்கப்பட்ட நபரிடம் ) ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் / மனுக்கள் முழுமையடையாதிருக்குமானாலும்கூட மற்றும் அவை நேரடியாகவோ அல்லது அஞ்சல் வாயிலாகவோ ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் கூட, பிரிவு அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபர் எழுத்துவடிவில் ஒப்புகை அளித்தல் வேண்டும். விண்ணப்பங்கள்/மனுக்கள் முறைப்படி இருக்குமானால் , அவை உடனடியாக பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு ஒப்புகை அளிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் முழுமையடையாதிருக்குமானால், குறைபாடுகளை எழுத்து மூலம் சுட்டிக்காட்டி விண்ணப்பத்தை, விண்ணப்பதாரரிடம் / மனுதாரரிடம் திருப்பியளித்தல் வேண்டும். பதிவு செய்வதற்காகவும் மூப்புநிலையைக் கண்காணிப்பதற்காகவும் தனிப்பட்ட பதிவேடு பராமரிக்கப்படவேண்டும். பிரிவு அலுவலர் இல்லாதிருப்பாரானால், அதிகாரமளிக்கப்பட்ட நபர், மனுக்கள் / விண்ணப்பங்களைப் பெற்று, ஒப்புகை அளிப்பதற்காகவும், பதிவு செய்வதற்காகவும் அலுவலக நேரங்களில் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

(ஈ) மின் நுகர்வோர், மின் வழங்குவதற்கான விண்ணப்பம் நீங்கலாக, பிரிவு அலுவலகத்தில் பின்வரும் சேவைகள் தொடர்பான விண்ணப்பங்கள்/மனுக்களையுங்கூட தாக்கல் செய்யலாம் ,–

(i) மின்னிணைப்பை இடமாற்றம் செய்தல் ;
(ii) தற்காலிக மின் வழங்கல் ;

(iii) மின்னிணைப்பின் பெயர் மாற்றம் ;

(iv) மின்கட்டண மாற்றம்;

(v) பட்டியலிடலிலுள்ள முறையீடுகள் ;

(vi) மின்னளவியை மாற்றிவைத்தல்;

(vii) மின் வழங்கல் தடை;

(viii) மின்னழுத்தம் தொடர்பான முறையீடுகள் ;

(ix) வைப்பீடுகளைத் திரும்பப் பெறுதல் ;

(x) (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ) மின் பகிர்மான உரிமம்தாரரால் நுகர்வோருக்கு வழங்கப்படவேண்டிய ஏனைய செயல்பாடுகள் தொடர்பாக ;

## 2. <u>பல்வேறு பட்ட பணிகளை செய்வதற்கான கால அட்டவணை .</u>

(அ) பயனுறு மின் வழங்கலுக்கான கால அட்டவணை

| வகை | தாழ்வழுத்தத்திற்கான காலஅட்டவணை |
|---|---|
| நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி எதனையும் உள்ளடக்கியிராதவை | விரும்பத்தக்க நிலையில் ஒரு வாரத்திற்குள் ஆனால் , 30 நாட்களுக்கு மேற்படாமல். |
| பகிர்மான மின்மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 60 நாட்கள் |
| பகிர்மான மின்மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 90 நாட்கள் |

| வகை | உயர்அழுத்த / அதிஉயர்அழுத்தத்திற்கான கால அட்டவணை | |
|---|---|---|
| | உயர் அழுத்தம் | அதி உயர் அழுத்தம் |
| நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியது | 60 நாட்கள் | 150 நாட்கள் |
| மின்மாற்றிதிறனை அதிகப்படுத்தல் / கூடுதலாக்குதல் உள்ளடக்கியது | 120 நாட்கள் | 180 நாட்கள் |
| புதிய துணை மின் நிலையங்களைத் தொடங்குதல் உள்ளடக்கியது | 180 நாட்கள் | 270 நாட்கள் |

(ஆ) பிற பணிகளைச் செய்வதற்கான கால அட்டவணை :–

| வகை | கால அட்டவணை |
|---|---|
| (அ) மின் அளவி / மின்னிணைப்பு இடமாற்றம் | 25 நாட்கள் |
| (ஆ) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் தொடர் தடமாற்றம் | 60 நாட்கள் |

| | |
|---|---|
| (இ) மின் மாற்றிக் கட்டமைப்பு இட மாற்றம் | 90 நாட்கள் |
| (ஈ) மின்னிணைப்பின் பெயர் மாற்றம் | 7 நாட்கள் |
| (உ) மின்கட்டண வீதம் மாற்றம் | 7 நாட்கள் |
| (ஊ) (மின் கணக்கீடு சரியாக இல்லை அல்லது குறைபாடாக உள்ளது அல்லது எரிந்துள்ளது எனில் ) மின்னளவியை மாற்றியமைத்தல் | 30 நாட்கள் |
| (எ)பணச்செலுத்தகைக்குரிய தேதிக்கு 3 நாட்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட பட்டியலிலுள்ள கணக்கு பிழை தொடர்பான முறையீடுகள் | பணச்செலுத்தகைக்குரிய தேதிக்குள் |
| (ஏ) பணச்செலுத்துகைக்குரிய தேதிக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள பிற பட்டியல் தொடர்பான முறையீடுகள் | திருப்பிக்கொடுத்தல் மற்றும் சரிக்கட்டுதல் பணியையும் சேர்த்து அடுத்த பட்டியல் தேதிக்கு முன்பு |
| (ஐ) மேற்கண்ட இனம், அ, ஆ, இ–விலுள்ள பணிகள் தொடர்பான கணக்குகளை முடித்தல் | பணி முடிவடைந்து 3 மாதங்களுக்குள், மீதி வைப்பீட்டுத் தொகையை வசூலித்தல் / திருப்பிக் கொடுத்தல் செய்யப்படுதல் வேண்டும். |

(இ) மின் வழங்கலில் ஏற்படும் இடைவெட்டுகள் / மின் தடங்கல்கள் ஆகியவற்றை சரி செய்வதற்கான கால அட்டவணை :-

| மின் இடைவெட்டுகள்/ தடங்கல்களுக்கான காரணங்கள் | மின் வழங்கல் மீட்புக்காலம் | | | |
|---|---|---|---|---|
| | மாநகராட்சி | நகர நகராட்சி | ஊரகப் பகுதிகள் | மலைப் பிரதேசம் |
| உயர் அழுத்த மின்வழங்கல் தடை | 1 மணி நேரம் | 3 மணி நேரம் | 6 மணி நேரம் | 12 மணி நேரம் |
| மின்மாற்றி அமைப்பில் அல்லது தாழ்வழுத்த மின்தொடரில் அல்லது கம்பப் பெட்டியில் ஏற்படும் தடை | 2மணி நேரம் | 4மணி நேரம் | 6 மணி நேரம் | 12 மணி நேரம் |
| பகிர்மான மின்மாற்றியில் ஏற்படும் தடை | 24மணி நேரம் | 48 மணி நேரம் | 48மணி நேரம் | 48 மணி நேரம் |
| தனிப்பட்ட மின் நுகர்வோரின் மின்னிணைப்பில் ஏற்படும் தடை | 3மணி நேரம் | 9 மணி நேரம் | 12 மணி நேரம் | 24 மணி நேரம் |

குறிப்பு : மேற்கண்ட கால அட்டவணைகள் ஆணையத்தின் விதித்தொகுப்பு / ஒழுங்குமுறைவிதிகளின் பிறவகைமுறைகளுக்கு உட்பட்டு பொருந்தத்தக்கதாகும். இது குறித்த மேலுமான விவரங்களுக்கு மின் நுகர்வோர்கள், ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட விதித்தொகுப்புகள் / ஒழுங்குமுறைவிதிகளை முழுமையாகப் படித்து அறிந்துகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

**3. <u>நஷ்டஈடு சம்மந்தமான வகைமுறைகள்</u> :–**

**(அ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மேலே குறிப்பிட்டுள்ள கால அட்டவணைப்படி அந்தந்த செயல்பாடுகளை வழங்கத்தவறுமானால், மின் நுகர்வோர்கள் பின்வரும் நஷ்டஈட்டை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திடமிருந்து பெறுவதற்கு உரிமையுடையவராவர் :–**

| வரிசை எண். | நிகழ்வுகள் | செலுத்தத்தக்க நஷ்டஈடு |
|---|---|---|
| 1. | கேட்கும் போது மின்னிணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை<br>(அ) புது மின்னிணைப்பு<br>(ஆ) கூடுதல் மின் சுமை<br>(இ) தற்காலிக மின்னிணைப்பு<br>(ஈ) மின்னிணைப்பு உரிமை மாற்றம்<br>(உ) மின்னிணைப்பு இடமாற்றம்<br>(ஊ) மின் கட்டண வீத மாற்றம் | ஒரு நாள் தாமதத்துக்கு ரூ.100/– வீதம் பெருமமாக ரூ.1000/–க்கு மிகாமல் |
| 2. | பட்டியலிடல் பற்றிய முறையீடுகள் | உரிய காலத்திற்குள் பதில் தராமைக்கு ரூ.150/ |
| 3. | மின்னளவி மாற்றி வைத்தல் | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/வீதம் பெருமமாக ரூ.1000/– க்கு மிகாமல் |
| 4. | மின்வழங்கல் தடங்கல் | ஒவ்வொரு 6 மணிக்கும் அல்லது அதன் பகுதி தாமதத்துக்கும் ரூ.50/– வீதம் பெருமமாக ரூ.2000/– க்கு மிகாமல் |
| 5. | மின்னழுத்த ஏற்ற இறக்கம் | குறிப்பிட்ட காலத்துக்குள் வருகைதர அல்லது முடிவுகளைத் தெரிவிக்க தவறினால் ரூ.250/– |
| 6. | நுகர்வோர் முறையீடுகளுக்குப் பதில் நடவடிக்கை எடுத்தல் | ஒவ்வொரு நாள் தாமதத்துக்கும் ரூ.25/– வீதம் பெருமமாக ரூ.250/– க்கு மிகாமல் |
| 7. | நுகர்வோர் சந்திப்பு ஏற்பாடுகளும் பதிதலும் | சந்திப்பு ஏற்பாட்டைத் தவற விட்டால் ரூ.50/– |
| 8. | குறை தீர்ப்பைக் கையாளுதல் | குறை தீர்ப்பைக் கையாளத் தவறிவிட்டால் ரூ.50/– |
| 9. | மின்பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு | ஒரு வாரம் அல்லது அதன் பகுதிக்கான தாமதத்துக்கு ரூ.100/–. திருப்பிக் கொடுக்கப்படும் தேதி வரையில் |

| | | |
|---|---|---|
| | மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17(6) ஒழுங்குமுறைவிதியில் அல்லது தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் 33(5) ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் வைப்பீட்டுத்தொகையை திருப்பிக் கொடுத்தல் மற்றும் மீதமுள்ள வைப்பீட்டுத் தொகையை திருப்பிக் கொடுத்தல் | ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டி கூடுதலாக கொடுக்க வேண்டும். |

**(ஆ) நஷ்டஈட்டுத் தொகை கொடுப்பதற்கான வழிமுறை :-**

(i) தானாகக்கொடுப்பது :–

இவ்வகை நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கும் முறைமையில் , உரிமம்தாரர் (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) பாதிக்கப்பட்ட நுகர்வோருக்குத் தானாகவே நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட செந்தரத்தை நிறைவேற்றாத போது, மின் உரிமம்தாரர் தானாகவே முன்வந்து, அதற்கு அடுத்து வரும் பட்டியலில், செந்தரத்தின்படியுள்ள நஷ்டஈட்டை வரவு வைத்தல் வேண்டும்.

(ii) கோரிக்கையின் பேரில் :–

செந்தரங்களைக் கடைபிடிக்காமையால் பாதிப்புற்ற நுகர்வோர்களுக்கான உரிய ஈட்டுத் தொகையை உரிமம்தாரர் (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்) அடுத்த பட்டியலிடும் காலத்துக்குள் செலுத்தத் தவறினால், நுகர்வோர் அதற்காக சம்பந்தப்பட்ட உரிமம்தாரரின் அதிகாரியிடம் முறையீடு செய்து அதைக் கோரிப் பெற உரிமையுடையவராவார்.

குறிப்பு :

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அதிகாரியால் இந்த முறையீடு தீர்வு செய்யப்பட்டதில், மின்நுகர்வோர் திருப்தியடையாதிருப்பாரானால், அவர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திடம் இது சம்பந்தமாக மனு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

**4. (அ) மின் நுகர்வோர் குறைதீர்மன்றங்கள் மற்றும் மின் குறைதீர்ப்பாளர் :–**

(i) மின்நுகர்வோரின் குறைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அலுவலர்களால் தீர்க்கப்படவில்லையெனில், அவர்கள் ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் அலுலகத்தில் இயங்கி வரும் ‘‘ மின்நுகர்வோர் குறைதீர்

மன்றத்தினை'' அணுகலாம். குறைதீர்மன்றத்தின் முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் இணையதளத்தில் கிடைக்கத்தக்கதாகச் செய்தல் வேண்டும்.

(ii) முறையீடுகள் / குறையீடுகள், முறையீட்டிற்கான படிவத்தில் அல்லது தேவையான விவரங்களான முறையீட்டளாரின் மின்னிணைப்பு எண், பெயர், முகவரி, குறைகளின் விவரங்கள், அடங்கிய எழுத்து வடிவிலான மனுவை மன்றத்தின் (சம்பந்தப்பட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளர்கள்) தலைவரிடம் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும். அல்லது இந்த விவரங்களுடன் மின் அஞ்சல் மூலமாகவும் தாக்கல் செய்யலாம். முறையீட்டாளர் விரும்புவரானால், தங்களது தொலைபேசி எண்ணையும், மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிடலாம்.

(iii) முறையீட்டினை ஏற்றுக் கொள்ளும் முடிவை, மன்றம் பத்து பணி நாட்களுக்குள் முடிவு செய்தல் வேண்டும் மற்றும் அந்த மன்றம் ஏழு பணி நாட்களுக்குள் முறையீட்டாளருக்கு ஒப்புகையை அனுப்புதல் வேண்டும்.

(iv) மன்றம், முறையீட்டினைப் பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் கால அளவிற்குள் விசாரணை செய்து விளக்கமான ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

**(ஆ) <u>பின்வரும் நேர்வுகளில் மின் நுகர்வோர் மின் குறைதீர்ப்பாளருக்கு மேல்முறையீடு செய்யலாம்</u>:—**

(i) முறையீட்டாளர், மின் குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்வதற்கு முன்பு, மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திடம் எழுத்துவடிவிலான முறையீட்டைச் செய்திருக்கும்போது, மற்றும் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், முறையீட்டை நிராகரித்துள்ளபோது அல்லது குறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலஅளவிற்குள் மன்றத்திடமிருந்து பதிலுரை எதுவும் பெறப்படாதபோது.

(ii) முறையீட்டாளர், மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் திருப்தியடையாதிருக்கும்போது.

**(இ) <u>மின் குறைதீர்ப்பாளர் முன்பு மேல்முறையீடு தாக்கல் செய்வதற்காக மேல்முறையீட்டாளர் பின்வரும் வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்</u> :—**

(i) முறையீட்டாளர், குறைதீர்மன்றத்தின் ஆணையின் வரையறைகளின் படி தொகை எதனையும் செலுத்துவதற்கு ஆணையிடப்பட்டிருப்பாரானால், அப்போது,

மேல்முறையீட்டாளர், மன்றத்தினால் ஆணையிடப்பட்டிருந்த தொகையின் 25 விழுக்காட்டினை வகுத்துரைக்கப்பட்டமுறையில் வைப்பீடு செய்தல் வேண்டும்.

(ii) மன்றத்தின் ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்யப்படுதல் வேண்டும். மின்குறைதீர்ப்பாளர், காலதாமதமாக மனு தாக்கல் செய்ததற்கான காரணம் குறித்து திருப்தியடைவாரானால், அவர் அந்த கால தாமதத்தைத் பொருட்படுத்தாமல் ஏற்றுக்கொள்ளலாம்.

மின்குறைதீர்ப்பாளர் அலுவலகம் பின்வரும் முகவரியில் செயற்பட்டு வருகிறது :

**மின்குறைதீர்ப்பாளர்,**
எண்.19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண். 044–28411376
மின்னஞ்சல் . tnerc@nic.in

**5. <u>செயலமைவுத்திட்டத்தை நிறைவேற்றுதல்</u> :–**

(அ) 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின், அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்/ விதித்தொகுப்புகளின், அல்லது ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் / உத்தரவுகளின் வகைமுறைக்கு இணங்கி நடக்காமை மேற் சொன்ன சட்டத்தின் 142ஆம் பிரிவின்படி தண்டிக்கப்படும் குற்றமாகும்.

**<u>142ஆம் பிரிவு பின்வருமாறு மறு ஆக்கம் செய்யப்படுகிறது,–</u>**

“ 142. *உரிய ஆணையத்தினால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு இணங்கி நடக்காமைக்கான தண்டனை :–*

*எந்த நபரும் உரிய ஆணையத்தின் முன்பு முறையீடு எதையும் தாக்கல் செய்தாலோ அல்லது அந்த ஆணையம், நபர் எவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளில் எதனையும் மீறியுள்ளார் என்று தெளிவுற அறிந்தாலோ, உரிய ஆணையம் அத்தகைய நபருக்கு இந்த விஷயத்தில் விளக்கமளிப்பதற்கான வாய்ப்பு நல்கிய பின்பு, எழுத்து வடிவிலான ஆணை மூலம், இந்தச் சட்டத்தின்படி, உள்ளாகக்கூடிய வேறு எந்த தண்டனைக்கும் குந்தகமில்லாமல், அத்தகைய நபர், அபராதத் தொகையாக, மீறுகை ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாத தொகையை செலுத்துதல் வேண்டும்; மற்றும் அத்தகைய முதல் அபராத உத்தரவுக்கு பின்பு*

*தவறுகை தொடரும்போது நாள் ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய் வரையான அபராதத்தொகையை கூடுதல் தண்டத்தொகையாக செலுத்துதல் வேண்டும் என்று உத்தரவிடலாம் ”*

(ஆ) பாதிக்கப்பட்ட நபர், மின்சாரச் சட்டத்தின் 142ஆம் பிரிவின்படி ஆணையத்திடம் அத்தகைய மீறுகை தொடர்பாக மனு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

**6. <u>கூடுதல் தகவல்கள்</u> :-**

மேலுமான விவரங்களுக்காக, மின்நுகர்வோர், 2003ஆம் மின்சார சட்டத்தின் வகைமுறைகளையும், ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட விதித்தொகுப்புகள், ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் ஆணைகள் ஆகியவற்றையும் முழுமையாக அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலேயுள்ள வழிகாட்டுதல்கள், தற்போதுள்ள ஒழுங்குமுறைவிதிகள், விதித்தொகுப்புகள், ஆணைகள் ஆகியவற்றின் வகைமுறைகளின்படி மின்நுகர்வோர்களின் தகவலுக்காக மிகத் தெளிவாக பிறப்பிக்கப்படுகிறது. மேற்படி தொடர்புடைய விதித்தொகுப்புகளை, ஒழுங்குமுறைவிதிகளை, அல்லது ஆணைகளை ஆணையம் திருத்தம் செய்யும் போதெல்லாம், இந்த மின் நுகர்வோர் உரிமைகள் மாற்றுதலுக்கு உள்ளாகக்கூடியதாகும்.